Deposition of witness
(Chapter XXIII Code of Civil Procedure)
In the Court of Subordinate Judge, Vaniyambadi, Vellore District

Deposition of witness for

| | |
|---|---|
| Name | Lokeshkumar |
| Father's Name | Sigamani |
| Village | Kavalur |
| Taluk | Vaniyambadi |
| Caste | Naidu |
| Calling | - |
| Religion | Hindu |
| Age | 33 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 10.11.2022

MCOP.121/2020 PW1 Name:**லோகேஷ்குமார்**

**முதல் விசாரணை**

நான் மனுதாரர். என் முதல் விசாரணை சாட்சியத்தினை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதனை என் முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். மனுவில் தாக்கல் செய்துள்ள முதல் தகவல் அறிக்கையின் நகல் ம.சா.ஆ.1 ஆகவும், காவலூர்/சத்திரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் வழங்கியுள்ள விபத்து பதிவேடு நகல் ம.சா.ஆ.2 ஆகவும், வாணியம்பாடி டேவிட் எலும்பு முறிவு மருத்துவனையில் வழங்கிய விபத்து பதிவேடு நகல் ம.சா.ஆ.3 ஆகவும், வாணியம்பாடி டேவிட் எலும்பு முறிவு மருத்துவனையில் வழங்கிய டிஸ்சார்ஜ் சம்மரி நகல் ம.சா.ஆ.4 ஆகவும், முதல் எதிர்மனுதாரரின் விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் காப்பீடு நகல் ம.சா.ஆ.5 ஆகவும், முதல் எதிர்மனுதாரரின் விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் ஆர்.சி நகல் ம.சா.ஆ.6 ஆகவும், முதல் எதிர்மனுதாரரின் விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் ஒட்டுநர் உரிமம் நகல் ம.சா.ஆ.7 ஆகவும், மைனர் மகாலட்சுமி/மனுதாரரின் பிறப்பி சான்று நகல் ம.சா.ஆ.8 ஆகவும், எனது ஆதார் அடையாள அட்டை (அசலுடன் ஒப்புநோக்கபட்டது) ம.சா.ஆ.9 ஆகவும், மைனர்

மகாலட்சுமி காவலூர் ஊராட்சி ஒன்றிய துவக்க பள்ளியில் முதல் வகுப்பு படித்து கொண்டிருக்கிறார் என்பதற்கான சான்று அசல் ம.சா.ஆ.10 ஆகவும், மனுதாரரின் புகைப்படம் ம.சா.ஆ.11 ஆகவும், மனுதாரின் எக்ஸ்ரே ம.சா.ஆ.12 ஆகவும், மனுதாரர் சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ ரசீதுகள் அசல் ம.சா.ஆ.13 ஆகவும், மனுதாரர் சிகிச்சைக்கு சென்றுவந்ததற்கான வாடகை வாகனத்தின் ரசீதுகள் (எண்ணிக்கை 20) அசல் ம.சா.ஆ.14 ஆகவும், குறியீடு செய்யுமாறு வேண்டுகிறேன். மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>1 ஆம் எதிர்மனுதாரின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

விபத்தில் காயம் அடைந்த மகாலட்சுமி என்னுடைய மகள். விபத்து சமயத்தில் அவருக்கு 5 வயது இருக்கும். விபத்து காவலூர் கிராமத்தில் கண்ணன் வீட்டருக்கே நடந்தது. 18.09.2020 ல் மதியம் 2 மணிக்கு விபத்து நடந்தது. விபத்து நடந்த உடன் சத்திரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அழைத்து சென்றேன். மேல் சிகிச்சைக்காக வாணியம்பாடி டேவிட் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். அங்கு 10 நாட்கள் சிகிச்சை பெற்றார். விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு எண் டிஎன் 83 8532 ஆகும். 1 ஆம் எதிர்மனுதாரர் இருசக்கர வாகனத்தை ஆரான் அடித்து மெதுவாகதான் ஒட்டி வந்தார் என்றாலும் குழந்தைதான் ஆஜாகிரதையாக வந்து வண்டியின் மேல் விழுந்துவிட்டது என்றால் சரியல்ல. 1 ஆம் எதிர்மனுதரர் அவரது விபத்து ஏற்படுத்திய வாகனத்தை 2 ஆம் எதிர்மனுதாரிடன் காப்பிடு செய்துள்ளார். இவ்வழக்கில் இழப்பிடு வழங்கவேண்டும் என்றால் 2 ஆம் எதிர்மனுதாரர்தான் வழங்கவேண்டும் என்றால் சரியல்ல. 1 ஆம் எதிர்மனுதாரர் அவரது வாகனத்திற்கு சரியான ஒட்டுநர் உாிமம் வைத்துள்ளார் என்றால் சரி. 1 ஆம் எதிர்மனுதரர்ரை பொறுத்து மனு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 10/11/2022 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/ கைரேகை செய்யப்பட்டது.

Sd//செல்வி.எஸ்.அசீன் பானு.,பி.எல்.
சாா்பு நீதிபதி
வாணியம்பாடி.